

தலைமைச் செயலகத்தில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில், நேற்று முன்தினம் (10.09.2024) சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட 5 மாவட்டங்களில் நடைபெற்று வரும் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து நீர்வளத் துறை பொறியாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க. மணிவாசன், நீர்வளத் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) எஸ். மன்மதன், நீர்வளத்துறை சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் ஆ. ஜானகி மற்றும் அனைத்து சென்னை மண்டல பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (10.09.2024) சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் பல்வேறு துறைகளின் சார்பில் 1607 நபர்களுக்கு 34.95 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர் எஸ். ராஜகண்ணப்பன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா காரைக்குடி மேயர் எஸ். முத்துதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். மாங்குடி, எஸ். முருகேசன், திருமதி. ஆர். தமிழரசி, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி. ஆஷா அஜித், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாதரெட்டி, சர்வதேச செஸ் விளையாட்டு வீரர் பிரனேஷ், சர்வதேச டென்னிஸ் விளையாட்டு வீரர் நந்தகிஷோர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### சென்னை மண்டலத்திற்குட்பட்ட 5 மாவட்டங்களில்

# வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள்!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, செப்.12-

நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் அவர்களின் தலைமையில், சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட 5 மாவட்டங்களில் நடைபெற்று வரும் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் நிரந்தர வெள்ளத்தடுப்புப் பணிகள் குறித்து நீர்வளத்துறை பொறியாளர்களுடன் தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (10.09.2024) ஆய்வுக் கூட்டம் நடத்தப் பட்டது.

ஆய்வுக் கூட்டத்தில் சென்னை,திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள நீர்நிலைகளில் பருவமழைக்கு முந்தைய முன்னேற்பாட்டு பணிகளாக ரூ.38.50 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, முக்கிய பகுதிகளான வீராங்கல்ஓடை, ஓட்டேரிநல்லா, விருகம்பாக்கம் - அரும்பாக்கம் கால்வாய், பக்கிங்காம் கால்வாய், வேளச்சேரி ஏரி, கூவம் மற்றும் அடையாறு போன்றவற்றில் உள்ள மிதக்கும் தாவரங்கள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றினை இயந்திரங்களை பயன்படுத்தி அகற்றி சுத்தம் செய்யும் பணிகள் வருகிற 30.09.2024க்குள் முடிக்குமாறும் மேலும் நிரந்தர வெள்ளத்தடுப்புப் பணிகளாக ரூ.590 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, முக்கிய பகுதிகளான தணிகாச்சலம் கால்வாய், மணப்பாக்கம் கால்வாய், மாதவரம் ரெட்டேரி மற்றும் கெருகம்பாக்கம் கால்வாய் போன்றவற்றில் நடைபெற்று வரும் பணிகள் அனைத்தும் வருகிற 30.09.2024க்குள் முடிக்குமாறு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், தேவையான மணல் மூட்டைகள், காலி கோணிகள் மற்றும் சவுக்கு கம்புகள் ஆகியவற்றை பருவமழையினை எதிர்கொள்ள ஏதுவாக ஆங்காங்கே போதுமான இருப்பு வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நீர்வளத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க.மணி வாசன், முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சா. மன்மதன், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் திருமதி. மு. ஜானகி மற்றும் அனைத்து சென்னை மண்டல பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவரின் அறிக்கையைத் திரித்து வெளியிடும் ‘தினமலர்’ நாளிதழுக்கு கடும் கண்டனம்!

# அரைவேக்காட்டுத்தனமாக எழுதுவதுதான் ‘தினமலரின்’ வளர்ச்சியா?

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

**சென்னை, செப்.12–**

**கழகத் தலைவர் அவர்களின் அறிக்கையைத் திரித்து வெளியிட்டுள்ள ‘தினமலர்’ நாளிதழுக்குக் கடும் கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ள கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, “இப்படி அரைவேக்காட்டுத்தனமாக தெரிந்து எழுதுகிறீர்களா? அல்லது தினமலரின் வளர்ச்சியே இவ்வளவு தானா?” என்று குறிப்பிட்டுள்ளார்.**



கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியின் அறிக்கை வருமாறு:-

அனைத்து வகையான ஆதிக்கத்தையும் ஒடுக்கி அன்னைத் தமிழ்நாட்டை மேம்படுத்தத் தோன்றிய இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் உதயமாகி 75 ஆண்டுகள் ஆகி விட்டது. பவள விழா கொண்டாடும் அமைப்பை ஆறாவது முறையாக அரியணை ஏற்றி அழகு பார்த்துள்ளார் ‘திராவிட மாடல்’ ஆட்சியை நடத்தி வரும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.

தமிழ்நாட்டை வளப்படுத்திய இயக்கம் இது. அதனால் வீதிகள் தோறும் கழகக் கொடி பறக்கட்டும் என்று தலைவர் சொல்லி இருக்கிறார். வீதிகள் தோறும் மட்டுமல்ல, வீடுகள் தோறும் பறந்திடவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

‘கழகக் கொடி மறக்காத கழகத்தினரின் வீடுகளே இல்லை என்னும் வகையில் பவளவிழாவை முன்னிட்டு நம் அனைவரது இல்லங்கள், அலுவலகங்கள், வணிக வளாகங்களில் கொடியேற்றிக் கொண்டாடுவோம்’ என்று தமிழில், புரிகிற எளிமையான சொற்களில் தான் தலைவர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

எளிய தமிழில் இருக்கும் அறிக்கையை படிக்கத் தெரியாதது போல ‘பவள விழாவுக்கு வீட்டில் விளக்கேற்ற உத்தரவு’ என்று செய்தி வெளியிட்டுள்ளீர்கள். இப்படி அந்த அறிக்கையில் இருக்கிறதா?

‘ஈவெரா, அண்ணாதுரை, கருணாநிதி ஆகியோரின் படங்களை அலங்கரித்து வைத்து, விளக்கேற்றிக் கொண்டாட வேண்டும்’ என்று தலைவர் சொன்னதாய் எழுதி இருப்பதை நிரூபிக்க முடியுமா உங்களால்? வீடுகளை விளக்குகளால் அலங்கரிப்பதற்குக் கூட விளக்கமா?

பிரதமர் மோடி வழியில் விளக்கேற்றச் சொல்கிறார் என்ற விளக்கமும் கொடுத்துள்ளீர்கள். கொரோனாவில் இலட்சக் கணக்கானவர்கள் உயிரிழந்தபோது அதை தடுக்க முடியாமல் ‘விளக்கேற்றவும்’, ‘சிங்கி அடிக்கவும்’ சொன்னார் பிரதமர் மோடி. இப்படி அரைவேக்காட்டுத்தனமாக தெரிந்து எழுதுகிறீர்களா?அல்லது வளர்ச்சியே இவ்வளவுதானா? என்பதை உங்கள் முடிவுக்கே விட்டு விடுகிறேன்.

இவ்வாறு ஆர்.எஸ். பாரதி தெரிவித்துள்ளார்.

